# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 71 — 1973 අගෝස්තු 03 වැනි සිකුරාදා — 1973.08.03**

71 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஒகத்து மாதம் 03 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 301 |
| பதவிகள்—வெற்றிடம் | 303 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | — |
| துணை விதிகள் | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| வரவு செலவுத் திரட்டுகள் | — |
| ஆதன விறபனைகள் | — |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | — |
| நானாவித அறிவித்தல்கள் | 307 |


*கவனிக்க.—மக்கோனைப் பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலமும் இலங்கைக் குட்டநோய்த் தடுப்புச் சங்கம் சட்டமூலமும், இலங்கைப் பொதுவைத்தியர்கள் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டம்

*வெள்ளவாய கிராமச்சபை*

(176 ஆம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டத்தின் 3 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

எப். ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 18 ந் உ.

**விதி**

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டத்திற்கமைவாக ஆக்கப்பட்டு 1919 எப்ரல் 4 ன் 7,004 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1943 எப்ரல் 9 ன் 9,108 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதியினால் கடைசியாகத் திருத்தப்பட்ட விதிகள், வெள்ளவாய கிராமச்சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள பிரதேசம் சம்பந்தப்பட்டவரையில் அவற்றின் ஆ 3 ம் இலக்க விதியிலுள்ள கட்டணங்களின் விகிதத்துக்குப் பதிலாக பின்வரும் புதிய விகிதங்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன.

| | ஒரு நாளைக்கு | ஒரு மாதத்துக்கு | திசம்பர் 31 உடன் முடிவடையும் ஒரு வருடத்துக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 199 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து | 5 00 | 50 00 | 200 00 |
| 199 பேருக்கு மேற்பட்டோருக்கு ஆனால் 399 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து | 10 00 | 100 00 | 400 00 |
| 399 பேருக்கு மேற்பட்ட ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து | 15 00 | 150 00 | 600 00 |

8-42—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுககொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலைசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

எல். டி.—பி. 89/52.

**வாடிவீடுகள் சட்டம்**

குருநாகலிலுள்ள வாடிவீடு தொடர்பில், (275 ஆம் அத்தியாயமான) வாடிவீடுகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் அதன்சார்பான தோதான அதிகாரியான குருநாகல் மாநகர சபையால் ஆக்கப்பட்டதும் அப்பிரிவால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான விதி.

ஜே். பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 2 ந் உ.

விதி

குருநாகலிலுள்ள வாடிவீட்டுக்கு ஏற்புடையனவாய் 1959 ஆம் ஆண்டு யூலை 24 ஆந் தேதிய 11,814 ஆம் இலக்கக் கசற்றில் வெளியிடப் பட்டவையும், 1967 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆந் தேதிய 14,781/6 ஆம் இலக்க அதிவிசேடக் கசற்றில் வெளியிடப்பட்ட விதியால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறுனவையுமான விதிகளானவை, அதனோடுள்ள அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணையை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

**அட்டவணை**

வாடிவீட்டை உபயோகித்தல், அதில் தங்குதல் தொடர்பாகச் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும் கட்டணவிதிப்புக்களும்.

தங்குதற்கான கட்டண விதிப்புக்கள்

| | ரூ. | ச. |
|---|---|---|
| (அ) வாடிவீட்டில், படுக்கையறையைத் தவிர்ந்த ஏதேனும் பகுதியை ஒரு மணித்தியாலத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு உபயோகிப்பதற்கு .. .. .. | | 40 |
| (ஆ) 1 ஆம் இலக்கம் முதல் 8 ஆம் இலக்கம் வரையுள்ள படுக்கையறைகளில் எதையேனும் உபயோகிப்பதற்கு— | | |
| (i) 6 மணித்தியாலங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கு | 3 | 00 |
| (ii) 6 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனால் 12 மணித்தியாலங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கு .. | 4 | 00 |
| (iii) 12 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஒரு காலத்துக்கு, 24 மணித்தியாலங்களைக் கொண்ட ஒவ்வொரு காலத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு .. | 5 | 00 |
| (இ) 9 ஆம் இலக்கம் முதல் 12 ஆம் இலக்கம் வரையுள்ள படுக்கையறைகளில் எதையேனும், 24 மணித்தியாலங்கள் கொண்ட ஒவ்வொரு காலத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு | 7 | 50 |

(மேற்கூறப்பட்ட கட்டணமானது கட்டில், சாய்வுக் கதிரை அல்லது சாய்வுக்கட்டில், அத்துடன் கட்டில் விரிப்பு, மேசை விரிப்பு, துவாய்கள், விளக்குகள் ஆகியவற்றின் உபயோகத்தையும் உள்ளடக்கும்).

மோட்டார் வாகனங்கள்

| | ரூ. | ச. |
|---|---|---|
| (1) வாகனசாலையொன்றை, 24 மணித்தியாலங்களைக் கொண்ட காலமொவ்வொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு, உபயோகிப்பதற்கு .. .. .. | 2 | 50 |
| (2) வாடிவீட்டு வளவில் மோட்டார் வாகனமொன்றை 24 மணித்தியாலங்களைக் கொண்ட காலமொவ்வொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு, நிறுத்திவைப்பதற்கு .. .. | 1 | 00 |

மதுபானக் கட்டணம்

| | ரூ. | ச. |
|---|---|---|
| (1) வாடிவீட்டுக் காப்பாளரால் வழங்கப்படாத மோல்ற் மதுபானம் வாடிவீட்டு வளவுக்குள் அருந்தப்படுமிடத்து, ஒவ்வொரு போத்தலுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. | 1 | 00 |
| (2) வாடிவீட்டுக் காப்பாளரால் வழங்கப்படாத மோல்ற் மதுபானம் தவிர்ந்த வேறெந்த மதுபானமும் வாடிவீட்டு வளவுக்குள் அருந்தப்படுமிடத்து ஒவ்வொரு போத்தலுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 2 | 50 |

புதிய உணவு

| | ரூ. | ச. |
|---|---|---|
| வாடிவீட்டுக் காப்பாளரால் வழங்கப்படாத உணவு வாடிவீட்டு வளவுக்குள் உண்ணப்படுமிடத்து, கத்தி, முள், கரண்டி அல்லது பீங்கான் வகைகள் சேவிக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட ஒவ்வொரு ஆளுக்கும். | 1 | 00 |

8–75—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

**பதுளை மாநகர சபை எல்லையை விரிவுபடுத்தி, பகுதிகளை திருப்பிப்பிரித்தல்**

பதுளை மாநகர சபை எல்லைக்குள் உள்ள பகுதிகளை பரிசீலனை செய்து, பிரிக்கும் விபரங்களை சமர்ப்பிப்பதற்கு கீழ் கூறப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவை உள்ளூராட்சிப் பகுதி அதிகாரி நியமித்துள்ளார்.

1. திரு. வி. பி. அபயவிக்கிரம, (தலைவர்) வழக்கறிஞரும் நொத்தாரிசும், பதுளை.
2. திரு. டீ. ஐ. கமால்தீன், (உறுப்பினர்) உள்ளூராட்சிப்பகுதி உதவி அதிகாரி, பதுளை.
3. திரு. டீ. டீ. சீ. ஹீன்தெனிய (உறுப்பினர்) நில அளவை உதவி அதிகாரி, பதுளை.

இந்நிர்வாகக் குழுவின் நோக்கம் :—

(அ) மாநகர சபை எல்லைக்குள் உள்ள அருகாமையில் உள்ள, விஸ்திகரிக்கப்பட்ட பகுதிகளை மாநகர சபை எல்லைக்குட் சேர்ப்பதா என்று தீர்க்கவும் ;

(ஆ) புதிய மாநகர சபை எல்லையை தீர்மானிக்கவும் ;

(இ) ஜனத்தொகையை பிரிவுகள் எல்லை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பதுளை மாநகர சபை எல்லைக்குள் எத்தனை அங்கத்தவர்கள் இருக்கலாம் என்று தீர்மானிக்கவும் ;

(ஈ) மாநகர சபைக்குள் உள்ள புதிய பகுதிகளை கண்காணிக்கும்போது கூடியவரை அதில் உள்ள எல்லைக்குட்பட்ட வாக்காளர்களையும் கண்காணிக்க வேண்டும். யாதொரு பகுதி வேறெரு பக்கத்து உள்ளூராட்சி சபைக்குட்பட்டவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளனவா ? அதன் ஆட்சியையும் பதுளை மாநகர சபை கண்காணிக்கின்றனவா என்றும் கவனிக்கப்படல் வேண்டும்.

(உ) பக்கத்திலுள்ள இத்துடன் இணைக்கப்படவேண்டிய பகுதிகளின் எல்லையையும், உள்ளூராட்சி, பதுளை மாநகரசபை புதிய எல்லையையும் தீர்மானிக்கவும் ;

(ஊ) சங்கங்கள், சமாசங்கள், பொதுமக்கள் எவரும் தாங்கள் விரும்பும் அபிப்பிராயங்களை எழுத்து மூலம் பதிவுத் தபாலில் 24.8.1973 ம் திகதிக்கு முன்னர் பதுளை உள்ளூராட்சி மன்ற அதிகாரிக்கு (உதவி) நான்கு பிரதிகள் கொண்டதாக அனுப்பிவைக்கவேண்டும்.

வி. பி. அபெயவிக்கிரம,
தலைவர்,
நிர்வாகக்குழு.

பதுளை,
1973.07.25 ம் திகதி.

8–350—03.08.73 ந் திகதிய வர்தமானி இல. 71

# பதவிகள் — வெற்றிடம்

## "இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை" யின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

**படிகள்.**—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

2. **சேவை நிபந்தனைகள்.**—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச்சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் எதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. **நியமன விதிகள்.**—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்தவேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவீதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவார். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின் படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத் திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும், அச்சேவையில், வேறொரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச்சம்பள உரிமைகளை பெறுவார்.

(இ) உள்ளூரர்ட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு, விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறுயினும் பெண்களும் 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச்சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள் 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட, 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச்சம்பள நிதிக்கு, தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சி மன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்று ஆண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்று ஆண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

4. **உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்" தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

(5) **கல்வியும் ஏனைய தகைமைகளும்.**—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

**குறிப்பு.**—(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

**குறிப்பு.**—(2) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக்கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

**குறிப்பு.**—(3) 4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. **போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.**—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படைவீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. **வயதுச்சலுகை.**—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும்பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. **வேண்டற்பால ஏனையவை.**—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா ? இல்லையா ? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிக்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும் ; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) " கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் " விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகி விட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

**வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப்பத்திரம்**
**உள்ளூராட்சிச் சேவை**

**முக்கியமாகக் கவனிக்க.**—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலிற் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யுமுன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றனர். விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் கட்டணங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

....................(..........) **பதவிக்கான விண்ணப்பம்**

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.

(ஆ) .................... பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.
தேசியஇனம் :————.

(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா ? இலங்கையரல்லாதவரா ? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக)

3. தபால் விலாசம் :————.
(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :—
————வருடங்கள்————மாதங்கள்————நாட்கள்

(ஆ) பிறந்த திகதி :—— வருடம் :————.
மாதம் :————. திகதி :————.

5. பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) அவரது பிதா :————.
(இ) அவரது பிதாவழிப் பேரன் :————.
(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.

(விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்.)

6. விவாகமானவரா ? தனியாளரா ? அல்லது தாரமிழந்தவரா ? கைம்பெண்ணா ? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :—

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 .............. | ...... | ...... | 1 .............. | ...... | ...... |
| 2 .............. | ...... | ...... | 2 .............. | ...... | ...... |
| 3 .............. | ...... | ...... | 3 .............. | ...... | ...... |
| 4 .............. | ...... | ...... | 4 .............. | ...... | ...... |
| 5 .............. | ...... | ...... | 5 .............. | ...... | ...... |

8. கல்வித் தகைமைகள் :—

(அ) சி.பா.த. பத்திரம்/க.பொ.த.ப.(சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல் தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க.பொ.த.ப. (உயர்தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(இ) வேறும் கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) மேற் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—

1. சிங்களம் :————.
2. தமிழ் :————.
3. ஆங்கிலம் :————.

9. பெற்றுள்ள எதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. உயர்தொழில்/தொழிநுட்ப/தொழில் அனுபவங்கள் :—

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றைவிட்ட திகதிகளுடன் தருக):—

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக :————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் ————.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? :————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா ? :—

(அ) சிங்களம் :————.
(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக :————.

14. ஒரு நீதிமன்றத்தில் எதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர்? :————.

16. வேறு எதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவை யென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.
செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

---

## உள்ளூராட்சிச் சேவை

*மிருக வைத்திய சத்திர சிகிச்சையாளர் பதவி*

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி முதலில் உடனடியாக கொழும்பு மாநகர சபையின் மிருக வைத்திய திணைக்களத்திற்கு நியமிக்கப்படுவர். அவர் இடமாற்றத்திற்குரியராவார்.

2. இப்பதவிக்குரிய வேதனக் கிரமம் வருடாந்தம் ரூபா 6720—12 × 360—5 × 480—13,440 ஆகும். வருடாந்தம் ரூபா 11,040 பெறுமுன் (திரட்டிய) வினைத் திறமைகாண் தடையுண்டு.

உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு நெறி ஒன்றை வெற்றிகரமாக முடித்திருக்காவிட்டால், மேற்கூறிய வேதனக் கிரமத்தில் வருடாந்தம் ரூபா 11,040/- ற்கு மேல் செல்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி உரித்துடையவராகார்.

ஒரு பரீட்சார்த்தி அவரது தகைமைகளுக்கும் அனுபவத்திற்கு மிணங்க உரிய ஒரு வேதனக் கிரமத்தில் வைக்கப்படுவார்.

3. வேண்டிய தகைமைகள் :—(அ) வயது 03.09.73 ல் 40 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கைப் பல்கலைக் கழகத்தின் மிருக வைத்திய இயலில் பட்டதாரித்தரம் பெற்றிருக்க வேண்டும். இலங்கைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் கிடைக்காவிட்டால் அங்கீகரிக்கப்பட்ட, இந்திய மிருக வைத்திய நிலையங்களின் பட்டதாரிகளிடமிருந்து வரும் விண்ணப்பங்களும் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி தனித்து சொந்தத்தில் வைத்தியஞ் செய்யத் தவிர்க்கப்பட்டவர் ஆவர். நியமிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற எல்லையுள் அவர் வசிக்கும்படி இருக்கும்.

5. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் 4வது பகுதியில் உள்ள, உள்ளூராட்சி சேவைப்பகுதிக்களுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் நிரப்பியனுப்பப்பட வேண்டும். 03-09-73 ம் திகதிக்கு பிந்தாமல் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

7. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தனர் என்று பகுதித் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்து சான்றுரைத்தாலன்றி அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

8. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் முடிவு திகதியின் பின் இருவாரங்களுக்குள் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

எட்கார் பர்னாந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு,
23-07-73.

8-93—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71.

### உள்ளூராட்சிச் சேவை

*வேலைத்தல முகாரி பதவி*

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் உ. ஆ. சேவை அதிகார சபையினுல் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி முதலில் உடனடியாக குருநாகல் மாநகரசபைக்கு நியமிக்கப்படுவார்.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனக் கிரமம் வருமாறு : வருடாந்தம் ரூபா 3,450—19×90—5,160. மணமானவர்களுக்கு அரசாங்க விதிகளுக்கு ஏற்ப ஒரு திருமணப்படியும் கப்படும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—(அ) 18-09-1973 ல் விண்ணப்பதாரர்களது வயது 40 இற்கு மேற்படக்கூடாது ;

(ஆ) விண்ணப்பதாரர்கள் கனிஷ்ட பாடசாலை தராதரப்பத்திரத்திலோ அல்லது அதற்குச் சமமான அல்லது அதற்கு உயர்ந்த பரீட்சையிலோ சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பதாரர்கள் மோட்டார் இயந்திர பொறிநுட்பம் சார்பாக நல்ல அறிவு பெற்றிருப்பதுடன் ஒரு அரசாங்கப் பொறிநுட்ப எந்திரியின் திணைக்களத்தில் அல்லது ஒரு உள்ளூராட்சி மன்றத்தில் அல்லது ஒரு எந்திரத் தொழில் நிலையத்தில் (மதிக்கப்பட்ட) பத்து வருடங்களுக்குக் குறையாத வேலைத்தல செய்முறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (அதில் ஐந்து வருடங்கள் மேற்பார்வையிடும் தகைமையில் கடமையாற்றியிருத்தல் வேண்டும்). (கல்வித் தகைமைகளுக்கு ஆதாரமாக வேலைத்தல அனுபவம் சார்பாகவும் சான்றிதழ்களின் பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்).

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் IV வது பகுதியில் உள்ள, உள்ளூர் ஆட்சிச் சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளுப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு 18.09.73 ஆந் தேதிக்குமுன் விண்ணப்பங்களை திரப்பியனுப்பப்பட வேண்டும். பிறப்புச் சான்றிதழின் பிரதிகளும் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளும் (மூலப்பிரதிகள் அல்ல) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். இப்பத்திரங்களுடன் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு உரியன.

6. விண்ணப்பங்களும் அவ்வை சார்பான கடிதங்களும் உ. ஆ. சே. அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்தில் உள்ள வேறு எந்த உத்தியோகத்தருக்கும் நேரடியாக அனுப்பப்படக்கூடாது.

7. விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சிமன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தாங்கள் நியமிக்கப்பட்ட உ. ஆ. மன்ற எல்லைக்குள் வசிக்கும்படி வேண்டப்படுவர்.

9. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப்பத்திரம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

எட்கார் பர்ணந்து,
செயலாளர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
26, ஜூலை 1973.

8-349—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71.

---

### உள்ளூர் ஆட்சிச் சேவை

*மருத்துவ உத்தியோகத்தர் பதவி (மருத்துவசாலை)*

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபையினுல் கோரப்படுகின்றன. நியமனத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி முதலில் கொழும்பு மாநகரசபையின் சுகாதாரத் திணைக்களத்துக்கு (நோய் திர்த்தல்) அனுப்பப்படுவார். கொழும்பு மாநகரத்தின் எல்லைக்குள் அவர் வசிக்க வேண்டும்.

2. **இப்பதவிக்குரிய திரட்டிய வேதன அடிப்படை வருமாறு.**—வருடாந்தம் ரூ. 9,600—4×360—11×480—ரூ. 16,320. வருடாந்தம் ரூ. 14,880 பெறமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு. மேற்படி வேதன அடிப்படையில், வருடாந்தம் ரூ. 14,400 வேதனப்படிக்கு அப்பால், பின்வரும் தகைமைகள் இல்லாத உத்தியோகத்தர் செல்லமாட்டார்.

(1) டி. ரி. எம். உம் எச. (இலங்கை) உம், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 6 மாதங்கள் பிணியாய் பயிற்றப் பயிற்சிவகுப்பும், இலங்கைப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் பட்டதாரிப் பயிற்சி நெறி வகுப்பும், அல்லது

(2) டி. ரி. எம். உம் (இங்கிலாந்து) எச். உம், பிரிட்டிஷ் பல்கலைக்கழகம் ஒன்றில் 6 மாதங்கள் பிணியாய் பயிற்சியும், அல்லது

(3) அரசாங்க மருத்துவ ஆட்கள்( (13.1.1955 ன் 10.753 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்) சம்பந்தமாகவுள்ள நிகழ்ச்சிக் குறிப்பின் பின்னிணைப்பு 1 இல் விதந்துரைக்கப்பட்டவற்றின் அடிப்படையில் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபையினுல் அங்கிகரிக்கப்பட்ட விசேட தகைமைகள்.

**குறிப்பு.**—அரசாங்க விதங்கள் நிபந்தனைகளுக்கிணங்க இளைப்பாற்றுச் சம்பளம் அல்லாத படிகள் கொடுக்கப்படும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—எம். பி. பி. எஸ். (இலங்கை) அல்லது இலங்கை மருத்துவச் சபையினுல் பதியப்படத்தக்க, வேறு சமமான மருத்துவத் தகைமைகள் விண்ணப்பதாரர்களுக்கு இருத்தல் வேண்டும். பதியப்பட்ட பின்னர், குறைந்தது 5 வருட அனுபவமாவதுள்ள மருத்துவர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களும் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி தனிப்பட்ட முறையில் தொழில் நடாத்தத் தவிர்க்கப்படுவதுடன் பகலில், இரவில் எந் நேரத்திலும் வேலை செய்ய அவர் தயாராய் இருக்க வேண்டும்.

5. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில், விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 03.09.1973 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட படிவத்தில் உள்ள 9 வது அம்சத்துக்குப் பதிலாகப் பின்வருமாறு சேர்க்கப்பட வேண்டும் :—

(அ) பதிவு செய்யப்பட்ட திகதி :————.

(ஆ) மருத்துவமும், உயர்தொழிலுக்குமுரிய தகைமைகள், திகதிகளுடனும், நிலையங்களின் பெயர்களுடனும் :————

(இ) பிணியாய் நிலையப் பயிற்சியும், பட்டதாரிப் பயிற்சி நெறிபற்றிய விபரங்களும் :————.

7. உள்ளூராட்சிச் சேவை அதிகார சபைச் செயலாளருக்கு விண்ணப்பங்களையோ அல்லது மற்றைய கடிதத் தொடர்புகளையோ விலாசமிட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள அல்லது உள்ளூராட்சி மன்றச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர், மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து திணைக்களத் தலைவர், மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

எட்கார் பர்ணண்டோ,
செயலாளர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
21.07.1973.

8-94—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

# நானாவித அறிவித்தல்கள்

### வரியிறுப்பாளர்களுக்கு அறிவித்தல்

மட்டக்களப்பு நகரம்—வட்டாரங்கள் 1-19

**நீர் வரி 1 ம் கந்தாயம், 2 ம் கந்தாயம், 3 ம் கந்தாயம்—1973**

62 ம் இலக்க 1.6.73 ம் திகதிய (IV வது பகுதி) இலங்கை வர்த்தமானி பத்திரிகையின் தொடர்பாக 1973 ம் ஆண்டிற்கான முதலாம், இரண்டாம், மூன்றுவது கந்தாயங்களின் நீர்வரி செலுத்தும் காலத்தை முறையே 31 யூலை, 31 ஆகஸ்ட், 31 ஒக்டோபர் 1973 வரை நீடிக்கப்பட்டிருக்கிறதென்பதை வரியிறுப்பாளர்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது. மேற் குறிப்பிட்ட திகதிக்கு பிறகு செலுத்தப்படும் பணத்திற்கு கூடுதலாக 10 வீத விருந்துச் செலவு அறவிடப்படும்.

கே. பீ. குணரத்ன,
மாநகர ஆணையாளர்,
மட்டக்களப்பு

மாநகர அலுவலகம்,
மட்டக்களப்பு, 24.7.1973.

8-282—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71.

---

### வாடகைச்சபை—அக்குரச

**அறிவித்தல்**

வீடமைப்பு நிர்மாண அமைச்சரால் 1972, மே 20 ஆம் தேதிய 15,011/4 ஆம் இல. அதிவிசேட அரசாங்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இல. வாடகைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் கீழும், 46 (2) (ஈ) பிரிவின் கீழும் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளில் 3 ஆம் ஒழுங்கு விதிக்கிணங்க, 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இல. வாடகைச் சட்டத்தின் நோக்கத்திற்காக அக்குரச, வாடகைச் சபைக்கு சகல விண்ணப்பங்கள் அனுப்பப்படும் முகவரியும், அத்தகைய விண்ணப்பங்களின் விசாரணைக்காக சபையின் அமர்வுகள் நடாத்தப்படும் இடமும் பின்வருமாறு என இத்தால் நான் அறிவிக்கின்றேன்.

வாடகைச்சபை, பட்டினசபை அலுவலகம், அக்குரச.

கே. டீ. ஏ. சத்ததிஸ்ஸ,
தலைவர்,
வாடகைச்சபை, அக்குரச.

பட்டினசபை அலுவலகம்,
அக்குரச,
1973 யூலை, 19.

8-73—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71.

---

### நிலாவெளிக் கிராமாட்சி மன்றம்

உள்ளூர் அதிகாரத்தாபனங்கள் (நியமத்துணைவிதிகள்) சட்டம்
(அத்தியாயம் 261.)

உள்ளூரதிகாரத்தாபனங்கள் (நியமத்துணைவிதிகள்) சட்டத்தின் அத்தியாயம் 261 (3) ஆம் பிரிவின் கீழ் திருக்கோணமலை மாவட்டத்து நிலாவெளிக் கிராமப் பிரதேசத்தின் கிராமாட்சி மன்றத்தினல் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் படி பிரசுரிக்கப்படுகின்றது.

**தீர்மானம்**

அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 1972 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 3 ஆந் திகதிய 32 ஆம் எண் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, தேசிய அரசுப் பேரவையினுல் அங்கீகரிக்கப்பட்டு, 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆம் திகதிய 66 ஆம் எண் வர்த்தமானப்பத்திரிகையில் அவ்வங்கீகாரம் பிரசுரிக்கப்பட்ட நியமத்துணைவிதி 42, இத்தீர்மானம் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று நிலாவெளிக் கிராமாட்சி மன்றம், உள்ளூரதிகாரத்தாபனங்கள் நியமத்துணைவிதிகள் சட்டத்தின் அத்தியாயம் 261 (3) ஆம் பிரிவின் II ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

யே. எம். சரீப்,
தலைவர்,
கிராமாட்சி மன்றம், நிலாவெளி.

கிராமாட்சி மன்ற அலுவலகம்,
நிலாவெளி, 23.7.1973.

8-258—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71.

---

### முல்லைத்தீவுப் பட்டண சபை

**பட்டண சபைகள் கட்டளைச் சட்டம்**

பட்டண சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 256) 161 ம், 163 ம் பிரிவுகளின் கீழ் முல்லைத்தீவுப் பட்டண சபை, 1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களுக்கு அவற்றிற்கு எதிராக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள கட்டணங்கள், இது வரை அறவிடப்பட்டு வந்த கட்டணங்களுக்கு பதிலாக, அறவிடப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ம. சூ. வஸ்தியாம்பிள்ளை,
தலைவர்,
பட்டணசபை, முல்லைத்தீவு.

பட்டணசபை அலுவலகம்,
முல்லைத்தீவு,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 18 ந் உ.

**அட்டவணை**

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| 1. | சீமெந்து சேகரித்து வைத்திருத்தல் .. | 100 | 0 |
| 2. | சிகை அலங்கார நிலையம் வைத்திருத்தல் .. | 25 | 0 |
| 3. | சுருட்டுத் தொழிற்சாலை வைத்திருத்தல் .. | 25 | 0 |
| 4. | ஆபரணங்கள் உற்பத்தி செய்தல் அல்லது பழுது பார்த்தல் .. .. .. | 75 | 0 |
| 5. | 50 கலனுக்கு அதிகமான மண்ணெண்ணை சேகரித்து வைத்திருத்தல் .. .. .. | 50 | 0 |
| 6. | 50 கலனுக்கு குறைவாக மண்ணெண்ணை சேகரித்து வைத்திருத்தல் .. .. .. | 15 | 0 |
| 7. | பைசிக்கிள் அல்லது மோட்டார் சைக்கிள் திருத்தும் தொழிற்கூடம் ஒன்று வைத்திருத்தல் .. | 12 | 0 |
| 8. | நெல் சேகரித்து வைத்திருத்தல் .. | 75 | 0 |
| 9. | நெல் குத்தும் நிலையம் வைத்திருத்தல் .. | 100 | 0 |
| 10. | இயந்திரம் உபயோகிக்காத கொல் உலைமுகம் எதுவும் வைத்திருத்தல் .. .. .. | 20 | 0 |
| 11. | காய்ச்சி இணைப்பதற்கான தாபனம் ஒன்று வைத்திருத்தல் .. .. .. | 50 | 0 |
| 12. | பகிரங்கக் களியாட்ட நிலையம் வைத்திருத்தல் | 250 | 0 |
| 13. | பனிக்கட்டித் தொழிற்சாலை வைத்திருத்தல் | 250 | 0 |
| 14. | பாண்சாலை வைத்திருத்தல் .. | 75 | 0 |
| 15. | தேநீர்க் கடை வைத்திருத்தல் .. .. | 20 | 0 |
| 16. | சாப்பாட்டுக் கடை வைத்திருத்தல் .. | 50 | 0 |
| 17. | மீனுக்கு ஐஸ்போடும் நிலையம் வைத்திருத்தல் .. | 100 | 0 |
| 18. | மோட்டார் வாகனங்கள் திருத்தும் நிலையம் வைத்திருத்தல் .. .. .. | 100 | 0 |
| 19. | கருவாடு பதனிடும் நிலையம் வைத்திருத்தல் .. | 10 | 0 |
| 20. | கோப்பி, தானியப் பொருட்கள், பருப்பு வகைகள், கறிச் சரக்குகள் அரைக்கும் நிலையம் ஒன்று வைத்திருத்தல் | 60 | 0 |
| 21. | கடைச்சல் பட்டடை வைத்திருத்தல் .. | 50 | 0 |
| 22. | தீந்தை வகைகள் விற்கும் நிலையம் வைத்திருத்தல் .. | 25 | 0 |
| 23. | டயர்களையும், ரியூப்களையும் வல்கனைசிங் செய்யும் நிலையம் வைத்திருத்தல் .. | 25 | 0 |
| 24. | வானொலிப் பெட்டி திருத்தும் நிலையம் வைத்திருத்தல் | 50 | 0 |
| 25. | கதிரை, மேசை, தளபாடக் கடை வைத்திருத்தல் .. | 50 | 0 |
| 26. | தச்சுத்தொழிற்சாலை வைத்திருத்தல் .. | 50 | 0 |
| 27. | இரும்புக் கடை வைத்திருத்தல் .. .. | 50 | 0 |
| 28. | ஐஸ்பழம், ஐஸ்கிறீம் விற்பனை செய்யும் நிலையம் வைத்திருத்தல் .. .. .. | 50 | 0 |

| | ரூ. | ச. |
|---|---|---|
| 29. வள்ளம் செய்யும் நிலையம் வைத்திருத்தல் .. | 100 | 0 |
| 30. மோட்டார் உதிரிப்பாகம் விற்கும் நிலையம் வைத்திருத்தல் .. .. .. | 50 | 0 |
| 31. நிழல் படம் எடுக்கும் நிலையம் வைத்திருத்தல் .. | 50 | 0 |
| 32. அலுமினியப் பாத்திரம் விற்கும் நிலையம் வைத்திருத்தல் .. .. .. | 25 | 0 |
| 33. படம் பிறேம் செய்யும் நிலையம் வைத்திருத்தல் .. | 25 | 0 |
| 34. பிடவைக் கடை வைத்திருத்தல் .. .. | 50 | 0 |
| 35. பசளை அல்லது உரம் சேகரித்து வைத்திருத்தல் .. | 100 | 0 |
| 36. போட் இயந்திரம், மர இயந்திரம் திருத்தும் நிலையம் வைத்திருத்தல் .. .. .. | 100 | 0 |
| 37. புகையிலை விற்பனை செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 25 | 0 |
| 38. அழுகக்கூடிய பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் வைத்திருத்தல் .. .. .. | 100 | 0 |
| 39. தேங்காய் எண்ணெய் சேகரித்து வைத்திருத்தல் .. | 25 | 0 |
| 40. சர்பத் கடை ஒன்று வைத்திருத்தல் .. | 15 | 0 |
| 41. பெற்றோல் நிலையம் ஒன்று வைத்திருத்தல் .. | 100 | 0 |
| 42. 10 குறோசுக்கு அதிகமான தீக்குச்சிப் பெட்டிகளை பண்டகசாலையில் வைத்திருத்தல் .. .. | 10 | 0 |
| 43. வைக்கோல் அல்லது காய்ந்த புல் பண்டகசாலைப்படுத்தல் | 15 | 0 |
| 44. இயந்திரம் உபயோகிக்கப்படும் மரமரியும் ஆலை ஒன்று வைத்திருத்தல் .. .. .. | 100 | 0 |
| 45. கையினால் இயக்கும் மரமரியும் இடங்கு அல்லது மரமரியும் ஆலை வைத்திருத்தல் .. .. | 25 | 0 |
| 46. வெட்டு மரக்காலை வைத்திருத்தல் .. | 125 | 0 |
| 47. பனை மரக்காலை வைத்திருத்தல் .. | 50 | 0 |
| 48. விறகு காலை வைத்திருத்தல் .. .. | 20 | 0 |
| 49. மொத்த விற்பனைக்காக 15 அந்தருக்கதிகமான அளவில் கோதுமை மா, உப்பு அல்லது சீனி பண்டகசாலைப் படுத்தி வைத்திருத்தல் .. .. | 50 | 0 |
| 50. வெற்றுப் போத்தல்களையும் வெற்றுச் சாக்குகளையும் பண்டகசாலைப் படுத்தி வைத்திருத்தல் .. | 15 | 0 |
| 51. கைத்தறியைத் தவிர்ந்த வேறு வகையால் பருத்தி நூல் நூற்றல் அல்லது செய்தல் .. .. | 75 | 0 |
| 52. அச்சகமொன்று வைத்திருத்தல் .. .. | 50 | 0 |
| 53. புகையிலை பதனிடுதல் அல்லது பண்டகசாலைப்படுத்தல் | 25 | 0 |
| 54. கள் சேர்க்கும் வாடி வைத்திருத்தல் .. | 50 | 0 |
| 55. உலர் சலவை செய்யும் அல்லது சாயமூட்டும் தாபனம் வைத்திருத்தல் .. .. .. | 25 | 0 |
| 56. பற்றறிகளுக்கு மின்னூட்டுதலும் அல்லது பழுது பார்த்தலும் .. .. | 25 | 0 |
| 57. இறைச்சிக்கடை வைத்திருத்தல் .. .. | 25 | 0 |
| 58. 100 க்கு மேலான எண்ணிக்கையான பறவைக் கூட்டு கோழிப்பண்ணை அல்லது தொழுவம் வைத்திருத்தல் | 25 | 0 |
| 59. உபயோகிக்கப்பட்ட கடதாசியே அல்லது செய்தித்தாள் சேகரித்து வைத்திருத்தல் .. .. | 10 | 0 |
| 60. தோல் சேகரித்து வைத்திருத்தல் .. | 15 | 0 |
| 61. தோற்பொருட்கள் உற்பத்தி செய்வதற்காய ஒரு தொழிற்சாலை வைத்திருத்தல் .. .. | 35 | 0 |
| 62. வாணங்கள் அல்லது வெடிகள் விற்பனை செய்யும் இடம் ஒன்று வைத்திருத்தல் .. .. | 10 | 0 |

8–43—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

**கிராமச் சபையின் வீதிகளையும் காலடிப் பாதைகளையும் பொது மக்களின் அறிதலுக்காக வர்த்தமானியில் பிரசுரித்தல்**

**பொது வீதிகள்**

1. சின்னத் தீவு வீதி
2. மைதான வீதி.
3. கல்லுமலை தெற்கு வீதி.
4. அந்தோனியார் கோயில் வீதி.
5. கல்லோடை மத்திய வீதி.
6. ஆஸ்பத்திரி லூர்துமாதா வீதி.

**காலடிப்பாதைகள்**

1. 2 ம் வட்டார நடைபாதை.
2. 3 ம் வட்டார நடைபாதை.
3. 4 ம் வட்டார நடை பாதை.
4. சின்னத்தீவு நடைபாதை.

அ. சந்தியா,
தலைவர்,
கிராமாட்சி மன்றம், இரணைதீவு.

8–79—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கபபடுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11.00 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளமபரஙகள் ஆகியவைகளுடன் அரசாஙக அழுத்தகரின பெயருக்கு எழுதபபட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பபபடல் வேண்டும்

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுககொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரஙகள் "சுப்பிறீம் கோட் புறேக்ரறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பினவருமாறு :—

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 0 |
| மேலதிகமான ஒவவொரு அங்குலமும் அல்லது அதன் பந்தி | 20 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ¼ பக்கம் .. .. .. | 220 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாறறபபடும்.

12. 1966 ம் ஆணடு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின பிரகாரம் அரசாஙக அழுததகர், அரசாஙக அசசுத் திணைககளம, கொழும்பு, அவாகடகு சகல அறிவித்தலகளும் விளம்பரங்களும் வந்துசேர வேணடும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திறகு) | உள்ளூர் | வெளியூர் |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. | 46 0 .. | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 .. | 42 0 |
| முதற் பகுதியின இரு பிரிவுகள் .. .. | 43 50 .. | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளபபெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திறகுள ஒவவொரு பகுதியும .. .. | 0 50 .. | 20 |
| (ii) வர்த்தமானியில் இடமபெறற திகதியிலிருந்து ஒரு மாதத் திறகுப் பின ஒவவொரு பகுதியும .. .. | 1 0 .. | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெறற திகதியிலிருந்து ஒரு மாதத் திறகுள முதற பகுதியின ஒவவொரு பிரி ..ம .. | 0 30 .. | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெறற திகதியிலிருந்து ஒரு மாதத் திறகுப பின முதறபகுதியின ஒவவொரு பிரிவும .. | 0 60 .. | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சநதாப் பணம எறபதறகும் தனிப்பிரதிகள் விறபனை செயவதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஓகத்து | .. | 3.8.73 | வெள்ளி | .. | 27.7.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 10.8.73 | வெள்ளி | .. | 3.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 17.8.73 | வெள்ளி | .. | 10.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 24.8.73 | வெள்ளி | .. | 17.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 31.8.73 | வெள்ளி | .. | 24.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | .. | 7.9.73 | வெள்ளி | .. | 31.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 14.9.73 | வெள்ளி | .. | 7.9.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 21.9.73 | வெள்ளி | .. | 14.9.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 28.9.73 | வெள்ளி | .. | 21.9.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.